# பீப்பள்ஸ் FX-பியுச்சர் பிளஸ் (FXFP)

**1. தயாரிப்பின் தன்மை**

நீண்ட கால அடிப்படையில் அதாவது 2 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையிலான காலப்பகுதிக்கு புதிய/முதல்முறை வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்கை USD, EUR, GBP, AUD ஆகிய வெளிநாட்டு நாணய வகைகளில் வைப்புச் செய்வதை மேம்படுத்துதல். (முதிர்வின்போது அல்லது வருடாந்தம் வட்டி செலுத்துதல்)

**2. வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் பயன்கள்**

2.1 கவர்ச்சிகரமான வட்டி வீதம்

2.2 புதிய வட்டி வீதத்திற்காக https://www.peoples.lk/interest-rates/ இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

2.3 சாதாரண வெளிநாட்டு நாணய நிலையான வைப்புக் கணக்குகளுடன் ஒப்பிடும்போது உயர் வட்டி வீதம்.

2.4 உங்கள் முதலீட்டுக்கு 100% பூரண பாதுகாப்பு

**3. தகைமை**

3.1 இலங்கையரல்லாத இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் குடியிருப்பவர்.

3.2 இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் குடியிருக்கும் இரட்டை குடியுரிமையுள்ள இலங்கையர்.

3.3 இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியில் குடியிருக்கும் வெளிநாடொன்றில் நிரந்தர வதிவை அல்லது குடியுரிமையைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசையொருவர்.

3.4 வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கைப் பிரசை, இலங்கைக்கு வெளியில் குடியிருப்பவர் (புலம்பெயர்ந்தவர்களைத் தவிர்த்து)

3.5 இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டுள்ள ஒரு கம்பனி.

**4. அனுமதி பெற்ற வரவு**

4.1 IIA/PFCA சேமிப்புக் கணக்கு ஊடாக வங்கி முறைமை மூலம் கணக்கு வைத்திருப்பவர் இலங்கைக்கு வெளியிலிருந்து வெளிநாட்டு செலாவணியில் பெற்றுக் கொண்ட புதிய/முதல்முறை பண அனுப்பலை ஆரம்ப வைப்புத் தொகையாக வைக்க முடியும்.

4.2 FXFP நிலையான வைப்பில் வைத்திருக்கும் நிதியத்திலிருந்து ஈட்டும் வட்டியை இந்தக் கணக்கில் சேர்த்துக்கொள்ள முடியும்.

## 5. அனுமதி பெற்ற பற்று

5.1 கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் ஏதேனும் வெளிச் செல்லும் பண அனுப்பல்.

5.2 இலங்கையில் இலங்கை ரூபாவில் செலவுசெய்தல்.

5.3 FXFP நிலையான வைப்பில் வைத்திருக்கும் நிதியத்திலிருந்து ஈட்டும் வட்டியை ஆரம்ப வைப்புத் தொகை கொண்டுவரப்பட்ட வழியில் IIA/PFCA சேமிப்புக் கணக்கிற்கு மாற்ற முடியும்.

5.4 FXFP நிலையான வைப்பில் வைத்திருக்கும் மூலதனத்தையும் FXFP நிலையான வைப்பில் ஈட்டிய வட்டியையும் ஆரம்ப வைப்புத் தொகை கொண்டுவரப்பட்ட வழியில் IIA/PFCA சேமிப்புக் கணக்கிற்கு மாற்ற முடியும்.

## 6. கணக்கைத் திறப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைமுறை

### 6.1 பொதுவானது

a) People's FX-Future Plus (FXFP) இனை நிலையான வைப்புக் கணக்கு என்ற வகையில் USD, EUR, GBP, AUD ஆகிய வெளிநாட்டு நாணய வகைகளில் மாத்திரம் குறைந்தபட்சம் 2 வருடத்திலிருந்து ஆகக் கூடியது 5 வருட காலப்பகுதிக்குத் திறந்து பேண முடியும்.

b) FXFP நிலையான வைப்புக் கணக்கை தனிநபர் கணக்காக அல்லது 3வது விடயத்தில் தரப்பட்டுள்ள (3.1), (3.2) மற்றும் (3.3) ஆகிய பிரிவுகளின் கீழ் தகுதி பெற்றுள்ள நெருங்கிய குடும்ப உறுப்பினர் ஒருவருடன் இணைந்த கணக்காக வைத்திருக்க முடியும்.

### 6.2 தேவைப்படும் ஆவணங்கள்

a) தனிநபர்களுக்காக ஒழுங்காகப் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கு திறக்கும் படிவம்.
https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018-E.pdf

b) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டின் பிரதி (விண்ணப்பதாரரின் விபரம், விசா மற்றும் மாற்றுவதற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டமை அடங்கிய பக்கம்). உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளும் (KYC) மாதிரி படிவம், மற்றும் வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை, (FATCA) மற்றும் விதிக்கப்படுகின்ற ஏனைய சம்பந்தப்பட்ட பத்திரங்கள்.

c) இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி மற்றும் வெளிநாட்டு கூட்டுநிறுவன முதலீட்டாளர்கள் போன்றவற்றிற்காக தகுந்தவாறு குறித்த கணக்கைத் திறக்கும் விண்ணப்பப் படிவம். உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்க (KYC) மாதிரி படிவம், வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை, மற்றும் விதிக்கப்படுகின்ற ஏனைய சம்பந்தப்பட்ட பத்திரங்கள்.

d) FXFP நிலையான வைப்புக் கணக்கைத் திறப்பதற்கு உரிய வகையில் தகுதியை உறுதிப்படுத்தும் தகவல்கள் மற்றும் ஆவணங்கள்.

**6.3 தேவையான குறைந்தபட்ச மீதி**

| நிலையான வைப்பு | தேவைப்படும் குறைந்தபட்ச மீதி |
|---|---|
| அமெரிக்க டொலர் | 5,000/- |
| யூரோ | 5,150/- |
| பிரித்தானிய பவுண் | 4,000/- |
| அவுஸ்திரேலிய டொலர் | 8,250/- |

**6.4 வட்டி கொடுப்பனவு**

a) புதிய வட்டி வீதத்திற்கு தயவுசெய்து https://www.peoplesbank.lk/interest-rates/ இனைப் பார்க்கவும்.

b) முறைமையின் மூலம் ஒவ்வொரு கணக்கிற்குமான வட்டி கணிப்பிடப்பட்டு வரவு வைக்கப்படும்.

**6.5 FXFP நிலையான வைப்பை மூடுதல்**

கணக்கு வைத்திருப்பவர் IIA/PFCA சேமிப்புக் கணக்கு ஊடாக வங்கி முறைமை மூலம் உடைமை கொண்டிருந்த ஆரம்ப வைப்புத் தொகையைக் கொண்ட அனைத்து முதலீடுகளை தாயகத்திற்கு அனுப்புவதற்கு/மாற்றுவதற்கு அகற்றும்/காசாக்கும் நடவடிக்கைமுறையின் பின்னர் FXFP நிலையான வைப்புக் கணக்கை மூடலாம்.